11--

அரியூர் பஞ்சாலையை இயக்குதல்

*64909--திரு. ஏ. கே.சி. சுந்தரவேல்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் அரியூர் பஞ்சாலை மூடப்படும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆலையை இலாபகரமாக இயக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆலை இயங்கிக் கொண்டிருக்கிறது.

(ஆ) அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போட்டு ஐந்து, ஆறு மாதங்களுக்கு மேல் ஆகின்றன. அப்பொழுது அந்த அரியூர் பஞ்சாலையிலே தொழிலாளர்கள் பிரச்சினை இருந்தது. மூடும் நிலையில் இருந்தது. ஆனால், இப்பொழுது அது நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வருகிறது. அந்த அரியூர் பஞ்சாலையிலே எத்தனைக் கதிர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 5,184 கதிர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரியூர் பஞ்சாலையை லாபகரமாக நடத்த அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை லாபகரமாக நடத்துவதற்கு நிதித்துறைச் செயலாளர், கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்கள் துறை செயலாளர் மற்றும் கைத்தறி ஆணையர் ஆகியோர் அடங்கிய

1996 பிப்ரவரி 15]

உயர் மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின் பேரில் 50 சதவிகிதம் ஆதாரக் குறைவைச் சரிகட்டவும், நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் நிலுவைத் தொகையை திரும்பச் செலுத்தவும் ரூ. 286.84 கோடி நிதியுதவி கோரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், முன்பு கேள்வியாகப் போட்ட பிரச்சினை இது. சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கருத வேண்டும் என்று என்னிடம் அனுமதி கேட்கிறீர்கள். துணைக் கேள்வி வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து மாதத்திற்கு முன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி போட்டு இருந்தாலும்கூட, மூடப்பட்டிருந்த ஆலை 6-12-95-ஆம் தேதிதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவதற்கு முன்னால் திறக்கப்பட்டது. ஆனால், பிறகு மீண்டும் 4-1-96-லே மூடப்பட்டது என்பதை ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கூட கொண்டு வந்தேன். ஆனால், அவர்கள் தொடர்ந்து நடப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 900 தொழிலாளிகள்தான் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் 10 சதவிகிதம் வேலை ஆட்கள்தான் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களேயொழிய, 90 சதவிகிதம் வேலை ஆட்கள் வேலையின்றி அங்கே திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறீர்களே! பழையபடி மூடப்பட்டது என்றும் சொல்கிறீர்கள், 10 சதவிகிதம் பேர் வேலை செய்கிறார்கள் என்றும் சொல்கிறீர்கள். சரி, கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு இப்பொழுது 10 சதவிகிதம் தொழிலாளிகள் மீண்டும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5,184 கதிர்கள் இப்போது அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், நான் கேட்பதெல்லாம் ஏற்கனவே பலமுறை கவன ஈர்ப்பாக இந்த அவையிலே கொண்டு வந்தும் சிறப்பு நிதி ரூ. 5 கோடியை நீங்கள் கொடுத்தால் நிச்சயமாக ஒரு நல்ல பஞ்சை நீங்கள் கொடுத்து, பஞ்சுக்கு பஞ்சம் இல்லாமல் செய்தால் ஆலை ஓடுவதற்குகான வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பஞ்சுக்கு மட்டும் எங்காவது கடன் பெற்றாவது தரமான பஞ்சை

சப்ளை செய்வார்கள் என்று சொன்னால் அங்கே தடை இல்லாமல் அந்த மில் ஓடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சிறப்பு நிதியாக ரூ. 5 கோடி இப்போது கொடுத்தால் அது நன்றாக இயங்கும் என்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 286.84 கோடி ரூபாய்க்கு அரசுக்கு ஏற்கனவே புரபோசல் அனுப்பியிருந்தாலும்கூட, ரூ. 5 கோடி சிறப்பு நிதியாக வழங்கி அந்தக் கூட்டுறவு நூற்பாலையை இயக்குவதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,184 கதிர்கள் இயங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது என்று சொன்னார்கள். 5,184 கதிர்கள் உண்மையிலேயே இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை உறுதியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, கோவை சித்ரா நிறுவனம் மேற்படி ஆலையில் ஓடும் இயந்திரங்களின் உற்பத்தித் திறனை கண்காணித்து அதன்படி தொழிலாளர்களுக்கு வேலை பளுவை நிர்ணயம் செய்தது. ஆனால், இந்த வேலை பளுவை ஆலையின் தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்ளாமல் அதிலே புறக்கணிப்பு செய்தன. அந்தப் பேச்சுவார்த்தையிலே சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் தொழிற்சங்கங்கள் சார்பாக கலந்துகொண்டு பேசினார்கள். ஆனால், அவர்கள் தலைமையில் இருக்கிற தொழிற்சங்கங்கள் வேலைக்கு வராமல் மறுப்பு செய்தார்கள். அதனாலே மற்ற தொழிற்சங்கங்கள் இந்த சித்ரா நிறுவனம் நிர்ணயித்த வேலைப் பளுவை ஒப்புக்கொண்டு வேலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு பஞ்சு தரப்படுகிறது. தரமான பஞ்சு தரப்படுகிறது. உங்கள் தலைமையிலே இயங்குகிற தொழிற்சங்கங்களையும் நீங்கள் வேலைக்கு அனுப்பினால் அவர்களையும் ஏற்றுக்கொண்டு, அந்த சித்ரா நிறுவனம் நிர்ணயித்த வேலைப் பளுவை ஒத்துக்கொண்டால் அவர்களுக்கும் வேலை தரப்படும். பஞ்சாலை தொடர்ந்து மற்ற தொழிலாளர்களுக்கும் வேலை தரும். இதிலே எந்தவிதமான சங்கடமும் கிடையாது.

முற்பகல் 11–00

திரு. சி. ஞானசேகரன்: ஒரே ஒரு சிறு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது என்ன கிளாரிபிகேஷன் (குறுக்கீடு) விதிகளிலே இடமில்லை, உட்காருங்கள்.

பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.